## செப்டம்பர் - 25 - திங்கள்

### முதல் வாசகம் : எஸ்ரா 1 : 1 - 6

எரேமியா வழியாக வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்கு நிறைவேறும்படி பாரசீக மன்னர் சைரசின் முதல் ஆண்டில் அவரது உள்ளுணர்வை ஆண்டவர் தூண்டினார். எனவே சைரசு ஆணை ஒன்றைப் பிறப்பித்து, அதைத் தம் நாடெங்கும் எழுத்துமூலம் வெளியிட்டார். பாரசீக மன்னர் சைரசு கூறுவது விண்ணகக் கடவுளான ஆண்டவர் மண்ணகத்திலுள்ள எல்லா அரசுகளையும் என்னிடம் ஒப்படைத்துள்ளார். மெலும் யூதாவிலுள்ள எருசலேமில் தமக்கென ஒரு கோவிலைக் கட்டும்படி அவர் என்னை நியமித்துள்ளார்.அவருடைய எல்லா மக்களிலும் யார் யார் அவரைச் சார்ந்துள்ளனரோ-கடவுள் அவர்களோடு இருப்பாராக!-அவர்கள், யூதாவிலுள்ள எருசலேமுக்குச் சென்று, இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவருக்கு ஒரு கோவிலைக் கட்டுவார்களாக! எருசலேமில் இருக்கும் அவரே கடவுள்! எஞ்சியுள்ளவன் ஒவ்வொருவனும் எங்குத் தங்கியிருந்தாலும் அங்கு வாழும் மக்கள், எருசலேமிலுள்ள கடவுளின் கோவிலுக்குத் தன்னார்வக் காணிக்கை அனுப்புவதோடு, அவனுக்கும் வெள்ளி, பொன், மற்றப்பொருள்கள், கால்நடைகள் ஆகியவற்றைக் கொடுத்து உதவுவார்களாக!”அப்போது யூதா, பென்யமினுடைய குலத்தலைவர்களும், குருக்களும் லேவியரும், எருசலேமில் ஆண்டவரின் கோவிலைக் கட்டச் செல்லுமாறு ஆண்டவரால் தூண்டப்பெற்ற அனைவரும் புறப்பட்டார்கள்.அவர்களைச் சூழந்து வாழ்ந்த மக்கள் தன்னார்வக் காணிக்கை அனைத்தும் கொடுத்ததுமல்லாமல் அவர்களுக்கு வெள்ளிப் பாத்திரங்களையும், பொன்னையும் மற்றப் பொருள்களையும், கால்நடைகளையும், விலையுயர்ந்த பொருள்களையும் கொடுத்து உதவினார்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்

### நற்செய்தி : லூக்கா 8 : 16-18

அக்காலத்தில் இயேசு கூறியதாவது : ”எவரும் விளக்கை ஏற்றி அதை ஒரு பாத்திரத்தால் மூடுவதில்லை கட்டிலின் கீழ் வைப்பதுமில்லை. மாறாக, உள்ளே வருவோருக்கு ஒளி கிடைக்கும்படி அதை விளக்குத்தண்டின் மீது வைப்பர். வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை அறியப்படாமலும் வெளியாகாமலும் ஒளிந்திருப்பதும் ஒன்றுமில்லை.ஆகையால், நீங்கள் எத்தகைய மனநிலையில் கேட்கிறீர்கள் என்பது பற்றிக் கவனமாயிருங்கள். உள்ளவருக்குக் கொடுக்கப்படும் இல்லாதவரிடமிருந்து தமக்கு உண்டென்று அவர் நினைப்பதும் எடுத்துக்கொள்ளப்படும். ”

**தியானம்:** இருளின் பாதையில் பயணம் போகுதே மனித மாண்புகள் இங்கே ஒளியைக் காண்பது எங்கே உதய ஆதவன் எங்கே,” இன்று நாங்களும் ஒளியாகி இயேசு எம்கூட இருந்தும் நாங்கள் அவரை தேடி அலைந்துகொண்டிருக்கின்றோம். எப்பொழுது நாங்கள் ஒளியாகிய இயேசுவை எமது வாழ்க்கையில் கண்டு கொள்கின்றோமோ, அப்பொழுதே பாவம் என்னும் சேற்றினால் இருளில் வாழ்ந்த நாங்கள் பிரகாசமடைகின்றோம். அதன்பின் எங்களது செயற்பாடுகளோ இறைவனையே முன்வைத்ததாக காணம்படும். எதுவும் மறைவாயிருக்காது. இதைத்தான் யார் யாரெல்லாம் ஆண்டவருக்கு ஏற்புடையவர்களாக இருக்கின்றாகளோ அவர்கள் கூடவே அவர் இருப்பார் என்றும் அவர்கள் யூதாவிலும், எருசலேமிலும் இஸ்ராயேலின் கடவுளுக்கு ஆலயம் கட்டுவார்கள். (எஸ்ரா 1:2,3) இவ்வாறாக முதல்வாசகத்தில் பார்க்கின்றோம். எனவே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களாக தூய ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்ற நாமும் எமது வாழ்வு மீண்டும் இருளடையாமல் பாதுகாக்கப்படவும் அன்று சீடர்களுக்கு தூய ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக்கொண்டவர்களாக யெருசலேமலும், சமாரியாவிலும், யூதேயாவிலும்……சாட்சியளாயிருப்பீர்கள் (தி.பணி.1:8) இயேசு கூறியது போன்று இன்று நாங்களும் அவர் என்னென்ன தாலந்துகளை கொடுத்திருக்கின்றாரோ அதேபோன்று நாங்களும் வாழ 10 கன்னியர்களில் 5பேர் எவ்வாறு தயாராக இருந்தார்களோ அதேபோன்று நாங்களும் முன்மதியுடன் விழித்திருந்து அவர் வருகைக்காக காத்திருந்து அவர் சாட்சிகளாய் மாறுவோம்.